E-AUCTION SALE NOTICE UNDER SARFAESI ACT 2002
Sale of Immovable Property
Under Rule 9(1) of Security Interest (Enforcement) Rules, 2002

DCB BANK

Public E Auction Notice for sale of Immovable Assets Charged to the DCB BANK under the Securitisationand Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 read with proviso to 8(6) of the Security Interest (Enforcement) Rules, 2002.

Notice is hereby given to the public in general and to the borrower, co-borrowers and the guarantors in particular, by the Authorized Officer, that the below mentioned property is mortgaged to DCB BANK LTD. The Authorized Officer of the Bank has taken the Physical & Symbolic possession under the provisions of Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002.The property will be sold by E-auction as mentioned below for recovery of the below mentioned dues and further interest, charges and cost etc. as per the details set out in the table:–

The property will be sold "as is where is","as is what is" and "whatever there is" condition.

Sr. No.	Details of the Secured Debt as on 29-03-2025	Reserve Price	Date and Time of E Auction	Earnest Money Deposit	Date & Time of Inspection	Type of Possession
1	Rs.20,63,963	Rs.20,30,000	**From 11.30 on 14th May 2025**	Rs.2,03,000	02nd May 2025 11.00 am to 4.00 pm	Physical
Name and Details of the Borrower : Mr. Binoy Thomas and Mrs. Ajimol Binoy Both are having address at Parapurathu House Near Ericadu Sndp Pariyaram P O Puthupally Landmark -Puthupally Kottayam Kerala Pin Code - 686021 and also at Re-Survey No.13, Sub Division.4-2-1-3, Block No.42, Koroppada - Village, Kottayam- Taluk, Pampady- Sub District, Kottayam-686502.					**Agreement No:** DRHLKOY00537109	
Details of the immovable property to be sold: Kottayam District, Pambady Sub District, Kottayam Taluk, Koroppada Village, Koroppada Limit, Re Survey No.13/4-2-12, Block : 42, Extent : 2.02 Ares. Boundaries (as per Location Plan in respect of 2.02 Ares) : East by : Property of Bhaskaran Alumkal, North by : Property of Syamkumar Peedikaparambil, South by : Property of shibumon Thakkidiyil, West by: 8 feet with private road.						
2	Rs.38,15,573 as on 20-11-2024	Rs.9,80,000	**From 11.30 on 24th April 2025**	Rs.98,000	16th April 2025 11.00 am to 4.00 pm	Physical
Name and Details of the Borrower : Mr. Sona Syriac and Mrs. Molly Cyriac Ernackal, Thalayolaparambu, Vadayar, Ernakulam, Kottayam-686605 also at 343/10 A/3/5 Thalayolaparambu P.O, Mittayikunnam, Kottayam, Adayar Village, Vaikkom Taluk, Kottayam District, Velloor, Kottayam-686605.					Agreement No : DRHLCOC00479216	
Details of the immovable property to be sold : Kottayam District, Thalayavilaparamb Subdistrict, Vaikom Taluk, Vadayar Village, Thalayayolaparamb Grama Panchayath Limit, Survey No. 343/10A-3-5-1 Extent 6.47 Ares, Boundaries (as per Location Sketch in respect of 6.47 Ares) East by : Property of Shiyas, South by : Property of Nisar, West by : Road, North by : Property of Kabeer.						
3	Rs.21,66,827 as on 06-01-2025	Rs.16,04,000	**From 11.30 on 24th April 2025**	Rs.1,60,400	16th April 2025 11.00 am to 4.00 pm	Physical
Name and Details of the Borrower : Mr. Dhanesh Gopi, Ramanikutty Gopi, Gopi A I, Aswathy Kuttappan all are residing at Adayattil, Thalayolaparambu, Thalayolaparambu P.o, Vadayar, Kottayam, Landmark -Near Kr Auditorium, Kottayam - 686605					Agreement No : DRHLCOC00507348	
Details of the immovable property to be sold : Kottayam District, Thalayolaparambu Subdistrict, Vaikom Taluk, Kulasekharamangalam Village, Maravanthuruth Grama Panchayath Limit, Survey No:5/2-1-2 , Extent: 2.42 Ares, Boundaries (as per Location Plan in respect of 2.42 Ares) : East by : Property of Jagathamma, South by : Property of Jayakumar and Sreeramakrishna Cottage, West by : Panchayath Road, North by : Property of Kunjumuhammed and pathway.						

Date and time of submission of EMD is on or before Sl.No. 1 - **13th May 2025** before **5 pm** and **Sl.No. 2 & 3 - 23rd April 2025** with request letter of participation KYC, Pan Card, Proof of EMD at email **id vijesh.vijayan@dcbbank.com - Vijesh Vijayan - 81130 56789.**

The intending purchasers/bidders are required to deposit EMD amount through Demand Draft/Pay order in the name of DCB Bank LTD.

TERMS AND CONDITIONS OF THE E-AUCTION ARE AS UNDER:

1. E-Auction is being held on "as is where is " and "whatever there is Basis" and will be conducted "On Line". The auction will be conducted through the Bank's approved service provider M/s Shriram Automall India Limited (Contact No……) at their web portal **https://www.eauctions.samil.in** E-auction tender document containing online e-auction bid form, Declaration, General Terms and Conditions of online auction sale are available in **https://www.eauctions.samil.in.**
2. To the best of knowledge and information of the Authorised Officer, there is no encumbrance on the property/ies. However, the intending bidders should make their own independent inquiries regarding the encumbrance, tile of the property/ies put on auction and claims/ rights / dues/ affecting the property, prior to submitting their bid. The e- Auction advertisement does not constitute and will be deemed to constitute any commitment or any representation of the bank. The property is being sold with all the existing and future encumbrances whether know or unknown to the Bank. The authorized Officer/ Secured creditor shall not be responsible in any way for any third party claims/rights/dues.
3. The EMD is refundable without any interest if the bid is not successful. The undersigned reserve the rights to accept or reject any or all the offers or adjourned / postpone the sale without assigning any reason thereof. If the offer is accepted, the purchaser will have to deposit 25% (less EMD Amount) of the sale price immediately on the auction day and if the purchaser fails to deposit the same, the amount deposited towards earnest money shall be forfeited and the property shall forthwith be sold again. The balance amount of purchase price shall be payable on or before the 15th day of confirmation of sale and in default of payment within the stipulated period, the deposit towards earnest money will be forfeited and property will be re-sold. Any other statutory dues/ taxes/ stamp duty/ registration fee/ transfer fee have to be borne by the buyer separately.
4. The sale shall be subject to rules/ conditions prescribed under the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002.
5. Bidders are advised to check detailed terms and conditions of auction sale before submitting their bids refer to the link https://www.dcbbank.com/cms/showpage/page/customer-corner.

Date : 07-04-2025 **For DCB Bank Limited**
Place : Kottayam **Authorized Officer**

E-AUCTION SALE NOTICE UNDER SARFAESI ACT 2002
Sale of Immovable Property
Under Rule 9(1) of Security Interest (Enforcement) Rules, 2002

DCB BANK

Public E Auction Notice for sale of Immovable Assets Charged to the DCB BANK under the Securitisationand Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 read with proviso to 8(6) of the Security Interest (Enforcement) Rules, 2002.

Notice is hereby given to the public in general and to the borrower, co-borrowers and the guarantors in particular, by the Authorized Officer, that the below mentioned property is mortgaged to DCB BANK LTD. The Authorized Officer of the Bank has taken the Physical & Symbolic possession under the provisions of Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002.The property will be sold by E-auction as mentioned below for recovery of the below mentioned dues and further interest, charges and cost etc. as per the details set out in the table:–

The property will be sold "as is where is","as is what is" and "whatever there is" condition.

Sr. No.	Details of the Secured Debt as on 23-01-2025	Reserve Price	Date and Time of E Auction	Earnest Money Deposit	Date & Time of Inspection	Type of Possession
1	Rs.37,99,190	Rs.32,56,000	**From 11.30 on 24th April 2025**	Rs.3,25,600	16th April 2025 11.00 am to 4.00 pm	Physical
Name and Details of the Borrower : Mr. Vimal Minin R and Ms. Yasoda Minin Both are having address at Narayanavilasam, Muttam, Haripppad, Cheppad, Alappuzha Ernakulam, Alappuzha -690511 and also at Re Sy No: 303, Sub Division: 1,1C, Block No.13, Narayana Vilasom, Cheppad- Village, Muttom-Kara, Cheppad-Sub District, Alappuzha-690511.					**Agreement No:** DRBLKOY00545907	
Details of the immovable property to be sold: Alappuzha District, Cheppad Sub District, Karthikappally Taluk, Cheppad Village, Cheppad Limit, Re Sy Block 13, Re.Survey. No. 303/13, 303/1C, Extent 02.92 Ares & 04.05 Ares. Boundaries (as per Location Plan in respect of 02.92 Ares & 04.05 Ares) : East by : Road, North by : Property of Sebastian, South by : Property of Inchakkottayil, West by : Property of Ramachandran.						
2.	Rs.10,42,568	Rs.11,99,000	**From 11.30 on 24th April 2025**	Rs.1,19,900	16th April 2025 11.00 am to 4.00 pm	Physical
Name and Details of the Borrower : Mr. Sreeji P V and Ms. Preeja N S Both are having address at Velikkakath, CMC 25, Cherthala North Part, Alappuzha- 688524					**Agreement No:** DRHLCOC00504370	
Details of the immovable property to be sold: Alappuzha District, Cherthala Sub District, Cherthala Taluk, Cherthala Vadakku Village, Survey No. 221/10-2, Extent 3.23 Ares. Boundaries (as per Location Plan in respect of 0.98 Ares) : East by : Private Road, North by : Property of Ravi, South by : Property of Lisi, West by : Property of Radhakrishnan.						
3.	Rs.62,77,554 as on 29-03-2025	Rs.70,16,000	**From 11.30 on 14th May 2025**	Rs.7,01,600	2nd May 2025 11.00 am to 4.00 pm	Physical
Name and Details of the Borrower : Mr. Hariharan P V and Ms. Malini T C Both are having address at 41/176 Tnp 81/A Sarangi, Thevarakavu Road, Thevarakavu Temple, Enoor, Tripunithura P O, Landmark -Nr Thevarakavu Temple Cochin – 682301 and also at Survey No 11/20A sub division 2, Door No. 2/136 Thaickal PO , Arthunkal village, Cherthala Taluk, Cochin-682301,					**Agreement No:** DRBLCOC00447119 & DRBLCOC00509611	
Details of the immovable property to be sold: Alappuzha District, Cherthala Sub District, Cherthala Taluk, Arthungal Village, Cherthala South Limit, Survey No. : 11/20A/2, Block 30, Extent 11.11 Ares, Boundaries (as per Location Plan in respect of 1.11 Ares) : East by : Property of Sebastian Vellappanad, North by : Road, South by : Proper of Beena and Joseph, West by : Property of Ramachandran Nair.						

Date and time of submission of EMD is on or before **Sl. No. 1 & 2 - 23rd April 2025** before **5 pm** and **Sl. No. 3 - 14th May 2025** before **5 pm** with request letter of participation KYC, Pan Card, Proof of EMD at email **id vijesh.vijayan@dcbbank.com - Vijesh Vijayan - 81130 56789.**

The intending purchasers/bidders are required to deposit EMD amount through Demand Draft/Pay order in the name of DCB Bank LTD.

TERMS AND CONDITIONS OF THE E-AUCTION ARE AS UNDER:

1. E-Auction is being held on "as is where is " and "whatever there is Basis" and will be conducted "On Line". The auction will be conducted through the Bank's approved service provider M/s Shriram Automall India Limited (Contact No……) at their web portal **https://www.eauctions.samil.in** E-auction tender document containing online e-auction bid form, Declaration, General Terms and Conditions of online auction sale are available in **https://www.eauctions.samil.in.**
2. To the best of knowledge and information of the Authorised Officer, there is no encumbrance on the property/ies. However, the intending bidders should make their own independent inquiries regarding the encumbrance, tile of the property/ies put on auction and claims/ rights / dues/ affecting the property, prior to submitting their bid. The e- Auction advertisement does not constitute and will be deemed to constitute any commitment or any representation of the bank. The property is being sold with all the existing and future encumbrances whether know or unknown to the Bank. The authorized Officer/ Secured creditor shall not be responsible in any way for any third party claims/rights/dues.
3. The EMD is refundable without any interest if the bid is not successful. The undersigned reserve the rights to accept or reject any or all the offers or adjourned / postpone the sale without assigning any reason thereof. If the offer is accepted, the purchaser will have to deposit 25% (less EMD Amount) of the sale price immediately on the auction day and if the purchaser fails to deposit the same, the amount deposited towards earnest money shall be forfeited and the property shall forthwith be sold again. The balance amount of purchase price shall be payable on or before the 15th day of confirmation of sale and in default of payment within the stipulated period, the deposit towards earnest money will be forfeited and property will be re-sold. Any other statutory dues/ taxes/ stamp duty/ registration fee/ transfer fee have to be borne by the buyer separately.
4. The sale shall be subject to rules/ conditions prescribed under the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002.
5. Bidders are advised to check detailed terms and conditions of auction sale before submitting their bids refer to the link https://www.dcbbank.com/cms/showpage/page/customer-corner.

Date : 07-04-2025 **For DCB Bank Limited**
Place : Alappuzha **Authorized Officer**

FORM A
PUBLIC ANNOUNCEMENT
(Regulation 14 of the Insolvency and Bankruptcy Board of India (Voluntary Liquidation Process) Regulations, 2017)

FOR THE ATTENTION OF THE STAKEHOLDERS OF FEDMAC EXPORTS PRIVATE LIMITED

1	NAME OF CORPORATE PERSON	**FEDMAC EXPORTS PRIVATE LIMITED**
2	DATE OF INCORPORATION OF CORPORATE PERSON	01/04/2008
3	AUTHORITY UNDER WHICH CORPORATE PERSON IS INCORPORATED / REGISTERED	Under Companies Act 1956
4	CORPORATE IDENTITY NUMBER / LIMITED LIABILITY IDENTITY NUMBER OF CORPORATE PERSON	U18101TZ2008PTC014349
5	ADDRESS OF THE REGISTERED OFFICE AND PRINCIPAL OFFICE (IF ANY) OF CORPORATE PERSON	10/291, Kunnangalpalayam, Ganapathypalayam Main Road Amman Nagar, Tirupur, Tamil Nadu, India, 641605
6	LIQUIDATION COMMENCEMENT DATE OF CORPORATE PERSON	05/04/2025
7	NAME, ADDRESS, EMAIL ADDRESS, TELEPHONE NUMBER AND THE REGISTRATION NUMBER OF THE LIQUIDATOR	**VENKATESH NATARAJAN** 119, Co Operative Colony, Uppilipalayam Post, Coimbatore -641015 Email: venkatesh@vsandassociates.in Mobile No.: 9843010292 IBBI Reg. No.: IBBI/IPA-001/IP-P-02315/2021-2022/13572
8	LAST DATE FOR SUBMISSION OF CLAIMS	07/05/2025

Notice is hereby given that the **Fedmac Exports Private Limited** has commenced voluntary liquidation on 05/04/2025.

The stakeholders of **Fedmac Exports Private Limited** are hereby called upon to submit a proof of their claims, on or before 07/05/2025, to the liquidator at the address mentioned against item 7.

The financial creditors shall submit their proof of claims by electronic means only. All other stakeholders may submit the proof of claims in person, by post or by electronic means.

Submission of false or misleading proofs of claim shall attract penalties.

Date: 08/04/2025 **VENKATESH NATARAJAN**
Place: Tirupur **LIQUIDATOR**
IBBI Reg. No.: IBBI/IPA-001/IP-P-02315/2021-2022/13572

Companies, Insight Out

Companies, **Monday to Saturday**

To book your copy,
sms **reachbs** to **57575** or
email **order@bsmail.in**

Business Standard 50 Years of Insight

10 YEARS OF Pradhan Mantri mudra Yojana

Government of India

इण्डियन ओवरसीज़ बैंक
Indian Overseas Bank
आपकी प्रगति का सच्चा साथी Good people to grow with

₹33000000000000+

Collateral-free MUDRA loans worth ₹33+ lakh crore by Modi Government



52+ crore MUDRA loans have furthered ease of credit to small businesses

70% of beneficiaries are women entrepreneurs, transforming their aspirations into reality

MUDRA loan limit **doubled to ₹20 lakh,** reposing faith in entrepreneurial spirit of our youth

Half of MUDRA loans to **SC, ST & OBC beneficiaries,** funding the unfunded and fulfilling their dreams

சட்டசபை எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.

நேரலை ஒளிபரப்பில் புறக்கணிக்கப்படுவதாக குற்றச்சாட்டு:

சட்டசபையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு

சபாநாயகருடன் எடப்பாடி பழனிசாமி கடும் விவாதம்

சென்னை, ஏப். 8—

சட்டசபையில் இன்று கேள்வி நேரம் முடிந்ததும் நேரமில்லா நேரத்தில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி எழுந்து பேச தொடங்கினார். இதற்கு சபாநாயகர் அப்பாவு அனுமதி அளிக்க வில்லை.

அவர் எடப்பாடி பழனி சாமியை பார்த்து, 'நீங்கள் அமருங்கள். ஜி.கே.மணி முக்கியமான பிரச்சினை பற்றி பேச உள்ளார். அதன்பிறகு நீங்கள் பேசு வதற்கு அனுமதிக்கிறேன்' என்றார்.

இருப்பினும் எடப்பாடி பழனிசாமி எழுந்து நின்று பேசி கொண்டிருந்தார். ஆனால் அவருக்கு மைக் இணைப்பு கொடுக்கப்பட வில்லை.

இதைத் தொடர்ந்து அ.தி. மு.க. எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் எழுந்து நின்று எதிர்க்கட்சி தலைவர் பேசுவத்கு மைக் இணைப்பு கொடுக்குமாறு குரல் எழுப்பினார்கள். அப்போது பேசிய சபாநாயகர் அப்பாவு, இன்று காலை 9.20 மணிக்குதான் என்னிடம் வந்து எதிர்க்கட்சி தலைவர் முக்கிய பிரச்சினை பற்றி பேச இருப்பதாக தெரிவித்தார். நீங்கள் ஒரு நோக்கத்துடனேயே வந்து உள்ளீர்கள் என்றார். அப்போது குறுக்கிட்ட அவை முன்னவர் துரை முருகன் எதிர்க்கட்சி தலைவர் என்ன பேசுகிறார் என்றுதான் பார்ப்போம்.

எனவே அவருக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (அப்போது அ.தி.மு.க. எம். எல்.ஏ.க்கள் மேசையை தட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர்).

இதன் பின்னர் சபாநாயகர் அப்பாவு பேசும்போது நேரடி ஒளிபரப்பு பற்றி எதிர்க் கட்சி தலைவர் பேச இருப்பதாக இன்று காலை யில்தான் தெரிவித்தனர். உறுப்பினர் ஜி.கே.மணி இரண்டு நாட்க ளாக முக்கிய பிரச்சினை பற்றி பேசு வதற்கு என்னிடம் அனுமதி கேட்டு கொண்டு உள்ளார். எனவே அவர் பேசிய பிறகு உங்களுக்கு அனுமதி அளிக்கிறேன் என்றார்.

அப்போது எடப்பாடி பழனிசாமி பிரதான எதிர்க்கட்சிக்குத்தான் முன்னுரிமை அளிக்க வேண்டும். மற்ற உறுப்பினர் களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டாம் என்று சொல்ல வில்லை என்றார். இதைத் தொடர்ந்து துரை முருகனும், எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், எதிர்க்கட்சி தலைவருக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதைத் தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி பேசுவதற்கு சபாநாயகர் அனுமதி அளித்தார்.

இதையடுத்து எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:—

அவை முன்னவருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மக்கள் பிரச்சினைகளை அரசின் கவனத்துக்கு கொண்டு சென்று அதனை தீர்க்கும் நோக்கில் கேள்வி நேரத்தின்போது சபையில் கேள்விகளை கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் பேசுவது நேரடி ஒளிபரப்பு செய்யப்பட வில்லை. எங்களது எம். எல்.ஏ.க்கள் விஜயபாஸ்கர், அக்ரி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கவன ஈர்ப்பு தீர்மா னத்தை கொண்டு வந்து பேசியபோது அவை ஒளிபரப்பு செய்யப்பட வில்லை.

இதன் மூலம் எங்களது எம். எல்.ஏ.க்கள் பேசுவது இரட்டடிப்பு செய்யப்பட்டு வருகிறது. இது ஒருதலை பட்சமான நடவடிக்கை யாகும். ஆளும் கட்சி மற்றும் கூட்டணி கட்சி எம்.எல்.ஏ.க்கள் பேசுவதும், முதல்— அமைச்சர் பேசுவதும் நேரடி ஒளிபரபபு செய்யப்படுகிறது. அனைத்து கட்சியினர் பேசு வதையும் நேரடி ஒளிபரப்பில் காட்டுவோம் என்று நீங்கள்தான் கூறி இருக்கிறீர்கள். அப்படி இருக்கும்போது சபை மரபை ஏன் கடைப்பிடிப்ப தில்லை.

சபாநாயகர் அப்பாவு:— எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டு இருப்பது தவறான தகவல் ஆகும். சட்டசபை நிகழ்ச்சிகள் நேரடியாக ஒளிபரப்பு செய்வது பற்றி குழு அமைக்க ஆய்வு செய்து முடிவு எடுத்துள்ளோம்.

சட்டசபையில் ஏதாவது ஒரு உறுப்பினர் கூறும் தகவலால் வெளியில் பிரச்சினை எதுவும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு கேள்வி நேரத்தை முழுமை யாக ஒளிபரப்பு செய்வது என்று முடிவு எடுத்து, அதன்படி கேள்வி நேரம் முழுமையாக ஒளிபரப்பப் படுகிறது.

ஏனென்றால் அப்போது தான் எந்த உறுப்பினரும் புகார்களை தெரிவிக்க மாட்டார்கள். அதைபோன்று சட்டசபையின் 110—வது விதியின் கீழ் முதல்—அமைச்சர் வெளியிடும் அறிவிப்புகளும், மானிய கோரிக்கை விவாதத்தின் முடிவில் அமைச்சர்கள் அளிக்கும் பதில்களும் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

முதல்—அமைச்சர் நேரடி ஒளிபரப்பில் எந்த பார பட்சமும் காட்டக்கூடாது என்று தெரிவித்தார். அதே நேரத்தில் எல்லா உறுப்பினர் களுக்கும் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று கூறி உள்ளார்.

சட்டசபையில் உறுப்பி னர் பேசும் ஏதாவது ஒரு வார்த்தையால் சமூகத்தின் அமைதிக்கு குந்தகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை கருத்தில் கொண்டு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்று முதல்—அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சட்டமன்ற நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்வோம் என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட படி செயல்பட்டு வருகிறோம். முழுமையாக ஒளிபரப்பு செய்வதை படிப்படியாக கொண்டு வருவோம்.

இவ்வாறு சபாநாயகர் விளக்கம் அளித்தார்.

அதன் பின்னரும் எடப்பாடி பழனிசாமி எழுந்து நேரடி ஒளிபரப்பு தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறி பேசி கொண்டே இருந்தார். அப்போது குறுக்கிட்ட அவை முன்னவர் துரைமுருகன், நீங்கள் கேட்டதற்கு சபாநாயகர் விளக்கம் கொடுத்துள்ளார். அது போதும் என்று நினைக்கிறேன். ஆனால் நீங்கள் ஒரு முடிவு எடுத்து விட்டு வந்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்? என்றார்.

சபாநாயகர் அப்பாவு ஜி. கே.மணியை பேச அழைத்தார்.

தொடர்ந்து பேசிய எடப்பாடி பழனிசாமி எங்களை வெளியேற்றி விட்டு, சபையை நடத்து கிறீர்கள் என்று தெரி வித்ததுடன் முதல்— அமைச்சரை குறிப்பிட்டும்ஒருவார்த்தையை சொன்னார்.

ஆனால் சபாநாயகர் குறுக்கிட்டு எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்தது அவையில் இடம்பெறாது என்று கூறியதுடன் எனது அனுமதியின்றி பதாகைகளை காட்டிய தால்தான் வெளி யேற்ற உத்தரவிட்டேன் என்றார். இதைத் தொடர்ந்து பேசிய அவை முன்னவர் துரை முருகன் குட்கா தொடர்பாக சபையில் பதாகைகளை காட்டியது தொடர்பாக வழக்கு கோர்ட்டில் உள்ளது என்றார்.

அதற்கு பதிலளித்த சபாநாயகர், அந்த விவகாரம் நீதிமன்றத்துக்கு சென்று முடிவுக்கு வந்துவிட்டது என்றார். பின்னர் பேசிய எடப்பாடி பழனிசாமி சட்ட மன்றத்தில் பேச எங்களுக்கு தொடர்ந்து அனுமதி மறுக்கப்படுகிறது.

இது போன்று செயல்பட்டால் மக்கள் பிரச்சினைகள் பற்றி எப்படி சபையில் பேசுவது? என்று கூறிவிட்டு சபையில் இருந்து வெளிநடப்பு செய்தார். அப்போது அ.தி.மு.க. எம். எல்.ஏ.க்கள் கோஷம் எழுப்பியபடியே வெளிநடப்பு செய்தனர்.

சட்டசபையில் நேற்று ஒரு பிரச்சினையை எழுப்பி பேசிய எடப்பாடி பழனிசாமிக்கு சபாநாயகர் அனுமதி மறுத்ததை தொடர்ந்து அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை வெளியேற்ற சபாநாயகர் உத்தரவிட்டார்.

சபையில் பதாகைகள் காண்பித்த 15 எம்.எல்.ஏ.க்கள் ஒரு நாள் சஸ்பெண்டு செய்யப் பட்டனர்.

இந்த நிலையில் இன்றும் 2—வது நாளாக சபையில் அ.தி. மு.க. எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு செய்தது குறிப்பிடத்தக்கது.

டெல்லியில் இன்று

நட்டா, அமித்ஷாவை சந்திக்க நயினார் நாகேந்திரன் திட்டம்

தமிழக பாரதீய ஜனதா கட்சிக்கு புதிய தலைவராகிறாரா?

சென்னை, ஏப். 8—

தமிழக பா.ஜனதா தலை வர் அண்ணாமலை யின் பதவிக்காலம் நிறைவ டைந்த தால் புதிய தலை வரை தேர்வு செய்வதில் கட்சி மேலிடம் தீவிரமாக ஈடுபட் டுள்ளது.

அண்ணாமலை மாற்றப் படுவாரா? அல்லது அவரே தலைவர் பதவியில் நீடிப்பாரா? என்ற பேச்சும் பலமாக அடிபடுகிறது. அதுக்கு காரணம் அ.தி.மு.க.வுடன் பா.ஜனதா கூட்டணி அமைக்க முயற்சிப்பதுதான்.

புதிய தலைவர்

இது தொடர்பாக டெல்லி சென்று அமித்ஷாவை சந்தித்த எடப்பாடி பழனி சாமி தமிழக பா.ஜனதா தலைமையில் கூட்ட ணிக்கு பிரச்சினைகள் வர வாய்ப்பு இருப்பதாக கூறினார். இதையடுத்து அண்ணாமலை யையும் அமித்ஷா அழைத்து ஆலோசனை நடத்தினார்.

அதன் பிறகு அண்ணா மலை அளித்த பேட்டிகள் அவர் மாற்றப்படலாம் என்றும் நீட்டிக்கப்படலாம் என்றும் பல்வேறு யூகங்க ளுக்கு வழி வகுத்தது.

அவர் மாற்றப்படலாம் என்ற கருத்து தொண்டர் களை விட தலைவர்கள் மத்தியில்தான் கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் மாற்றப்பட்டால் தலைவர் பதவியை பிடிப்பது எப்படி எனறு ஒவ்வொருவரும் காய் நகர்த்த தொடங்கினார்கள்.

தலைவர் பதவிக்கான போட்டியில் மத்திய மந்திரி எல். முருகன், முன்னாள் கவர்னர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், மகளிரணி தேசிய தலைவி வானதி சீனிவாசன், மூத்த தலைவர் எச்.ராஜா, நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ. பேராசிரியர் ராம சீனிவாசன் ஆகியோர் இந்த போட்டியில் தீவிர ஆர்வம் காட்டுகிறார்கள்.

இவர்கள் ஒவ்வொரு வரும் தனித்தனி வழிகளில் காய் நகர்த்துகிறார்கள். எச்.ராஜா மூத்த நிர்வாகி. அவர் இதுவரை மாநில தலைவர் ஆனதில்லை. அதுமட்டு மல்ல, அண்ணாமலையை போல் அதிரடி அரசியல் பண்ணுவார் என்று டெல்லி மேலிடத்துக்கு நெருக்கமான தமிழக பிரபலங்கள் சிலர் முயற்சிக்கி றார்கள்.

அகில இந்திய மகளிர் அணி தலைவராக இருக்கும் வானதி சீனிவாசனுக்கு ஆதரவாக மத்திய மந்திரி ஒருவர் களம் இறங்கி இருப்பதாகவும், அவர் அண்ணாமலையை எப்படியா வது மாற்ற வேண்டும் என்று கங்கணம் கட்டி செயல்ப டுவதாகவும் கூறப்படுகிறது.

இப்படி பல தளங்களில் இருந்து பல்வேறு விதமாக தகவல்களை மேலிட தலை வர்கள் காதுகளில் போட்டா லும் சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் யாரை தலைவராக நியமித் தால் கட்சிக்கும் கூட்ட ணிக்கும் பலம் சேர்க்கும் என்ற அடிப்படையில் பரி சீலித்து வருவதாக கூறப்படு கிறது.

அதில் நயினார் நாகேந்தி ரன் முன்னிலை வகிப்பதாக தெரிகிறது. அ.தி.மு.க.வில் அமைச்சராக இருந்தவர் நயினார் நாகேந்திரன். எனவே கூட்டணி அமைப் பது, கூட்டணி பேச்சு வார்த்தையை சுமூகமாக கொண்டு செல்வது ஆகி யவை சுலபமாக இருக்கும் என்று கருதுகிறார்கள்.

அதே நேரம் கட்சி வளர்ச்சிக்கு எந்த பலனை யும் தராது என்று கட்சியினர் சிலர் வெளிப் படையாகவே கூறுகிறார்கள்.

டெல்லி சென்றார்

இந்த நிலையில் நயினார் நாகேந்திரன் நேற்று இரவு திடீரென்று டெல்லி புறப் பட்டு சென்றது உச்ச கட்ட பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கிடையில் நேற்று மாலையில் அண்ணாமலை கூறும்போது, 'நான் பிரதமர் மோடி என்ற ஒரே தலை வரை நம்பிதான் கட்சிக்கு வந்தேன். அவர் கைகாட்டும் பணி எதுவாக இருந்தாலும் செய்து முடிப்பேன். நான் முழு நேரமும் களப்பணியில் இருப்பேன்.

மாநிலத்தில் தி.மு.க.வை ஆட்சியில் இருந்து அகற்று வதற்காக நான் என் காலணி களை கழற்றி இருக்கிறேன். எனது முழுநேரத்தையும் இன்னும் தீவிரமாக களத் தில் செலவிடுவேன்.

மக்களை சந்திக்க நிறைய பயணம் இருக்கும். மாநில தலைவரை போல் எனக்கு அதிக வேலை இருக்காது. அதனால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மற்றவர்கள் நிறுவன பணிகளை செய் யட்டும். அதனால்தான் அடுத்த மாநில தலைவருக் கான போட்டியில் நான் இல்லை என்றேன் என்றார்.

நயினார் நாகேந்திரன்

இதனால்தான் அண்ணா மலை மாற்றப்படலாம் என்று உறுதியாக பேச்சு அடிபடுகிறது. அதனால் தான் நயினார் நாகேந்திரன் டெல்லி சென்றிருப்பதாக கூறப்ப டுகிறது. டெல்லியில் இருக்கும் நயினார் நாகேந்திரன், நட்டா, அமித்ஷா ஆகியோ ருடன் ஆர். எஸ்.எஸ். தலைவர்கள் சிலரையும் சந்திக்க இருப்பதாக கூறப் படுகிறது.

இந்த பரபரப்புக்கு இடை யில் அண்ணாமலை சிருங்கேரி சென்றிருக்கிறார். இன்னும் ஓரிரு நாட்களுக்குள் புதிய தலைவர் அறிவி க்கப்படு வார் என்று கட்சியினர்கூறுகிறார்கள்.

மசோதாக்களை கவர்னர் நிறுத்தியது சட்டவிரோதம் என்று

சுப்ரீம் கோர்ட்டு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கி உள்ளது

சட்டசபையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஏப்.8—

சுப்ரீம் கோர்ட்டில் கவர் னருக்கு எதிராக வழங் கப்பட்ட தீர்ப்பு குறித்து சட்டசபையில் முதல்— அமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது:—

அவைக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சற்றுமுன்பு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை நமது தமிழ்நாடு அரசு பெற்று உள்ளது. இந்தச் சட்டமன்றப் பேரவையில் நாம் நிறை வேற்றி கவர்னரின் ஒப்பு தலுக்காக அனுப்பி வைத்த பல முக்கியமான சட்ட முன் வடிவுகளுக்கு ஒப்புதல் தராமல் திருப்பி அனுப்பி னார்.

அந்த நிலையில் அவற்றை நாம் மீண்டும் இங்கே நிறை வேற்றி அனுப்பி வைத் தோம். 2—வது முறை சட்ட மன்றப் பேரவை நிறை வேற்றிய சட்ட முன் வடிவு களுக்கு கவர்னர் ஒப்புதல் அளித்தே ஆகவேண்டும் என்று அரசியல் சட்டம் வரையறுத்திருந்த போதி லும், இவற்றிற்கு ஒப்புதல் அளிக்காமல் கவர்னர் காலம் தாழ்த்தி வந்ததோடு, அதற்கு தனக்கு அதிகாரம் இருப்பதாகவும் தெரிவித்து வந்தார்.

இதனை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததில், தமிழ்நாடு அரசின் வாதத்தில் இருந்த நியாயத்தை ஏற்று, சட்ட முன் வடிவுகளை கவர்னர் நிறுத்தி வைத்திருந்தது சட்ட விரோதமானது என்றும், அந்தச் சட்ட முன் வடிவு களுக்கு கவர்னரின் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டுமென்றும் தெரிவித்து, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை இன்றைக்கு உச்ச நீதிமன்றம் வழங்கி உள்ளது.

இந்தத் தீர்ப்பு தமிழ் நாட்டிற்கு மட்டுமின்றி, இந்தியாவில் உள்ள அனைத்து மாநில அரசுக ளுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். தி.மு.க.வின் உயிர்க் கொள்கையான மாநில சுயாட்சி மற்றும் கூட்டாட்சித் தத்துவம் ஆகியவற்றை நிலைநாட்டிட தமிழ்நாடு போராடியது. தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்.

சட்டசபையில் வரவேற்பு

இதைத் தொடர்ந்து சட்டசபையில் ஒவ்வொரு கட்சி எம்.எல்.ஏ.க்களும் வரவேற்று பேசினார்கள். அ.தி.மு.க., பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் யாரும் பேச வில்லை. இறுதியாக முதல்—அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:—

உச்சநீதிமன்றம் மூலமாக நாம் பெற்றிருக்கக்கூடிய தீர்ப்பை வரவேற்று தங்களது மகிழ்ச்சியை அனைத் துக்கட்சி, மன்னிக்கவும் (அ.தி.மு.க.வை ஆளும் கட்சி என்று தவறுதலாக கூறிய போது எல்லோரும் எதிர்க் கட்சி என்று குரல் கொடுத்த தும் முதல்— அமைச்சர் மு.க. ஸ்டாலின் மகிழ்ச்சியில் பதட்டமாகி விட்டது என்று கூறினார்.) அ. தி.மு.க., மத்தியில் ஆளும் பா.ஜ.க. ஆகிய 2 கட்சிகள் தவிர்த்து அனைத்து கட்சி தலை வர்கள், உறுப்பினர்கள் இங்கே தீர்ப்பை பாராட்டி, வாழ்த்தி பேசி வரவேற்று உள்ளனர்.

இந்த நேரத்தில் அரசிய லமைப்பு சட்டத்தில் மாநில சட்டமன்றத்துக்கு அளித்திருக்கும் உரிமையை நிலைநாட்டி உள்ளது தமிழக அரசு, இங்குள்ள அனைத்து உறுப்பினர்கள், நம்மை தேர்ந்தெடுத்த தமிழ்நாட்டு மக்கள் சார்பில் மனமார்ந்த நன்றியை உச்சநீதிமன்றத் துக்கு நான் தெரிவித்து கொள்கிறேன். அவை முன்னவர் (துரைமுருகன்) இங்கே நெகிழ்ச்சியுடன் பேசினார்.

தலைவர் கலைஞர் மடியில் வளர்ந்தவன் என்று சொன்னார். நீங்கள் தலைவர் கலைஞர் மடியில் வளர்ந்தவன் என்று சொல்லும்போது உங்கள் மடியில் நான் வளர்ந்தவர். ஆகவே கொள்கையில் நிச்சயமாக உறுதியாக இருப்பேன். இந்த மகிழ்ச்சியை நாம் வெளிப்படுத்தக்கூடிய வகையில் அ.தி.மு.க, பா. ஜனதாவை தவிர்த்து அனைவரும் மேஜையை தட்டி நமது நன்றியை தெரிவிக்க வேண்டும் என்றார். இதைத் தொடர்ந்து தி.மு.க மற்றும் கூட்டணி கட்சியை சேர்ந்த அனைவரும் மேஜையை தட்டி வரவேற்றனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

தமிழக கவர்னர் 10 மசோதாவை...

3-ம் பக்க தொடர்ச்சி

தாக்களுக்கு ஒப்புதல் அளிக்கவில்லை. 2 மசோ தாக்களை அவர் ஜனாதி பதிக்கு அனுப்பினார்.

வழக்கு

இதையடுத்து தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. அதில், "குறிப்பிட்ட கால வரம் புக்குள் மசோதாக்களுக்கு தமிழக கவர்னர் ஒப்புதல் வழங்க உத்தரவிட வேண் டும்" என்று கூறப்பட்டு இருந்தது. இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, ஆர். மகாதேவன் ஆகியோர் அமர்வில் நடந்து வந்தது.

கடந்த பிப்ரவரி மாதம் இந்த வழக்கு விசாரணை நடந்தபோது துணைவேந்தர் நியமனம் தொடர்பான மசோதாவில் கவர்னருக்கும் தமிழக அரசுக்கும் ஏற்பட்டு உள்ள மோதல் பற்றி நீதிபதி கள் பல்வேறு கேள்விகளை எழுப்பினார்கள். மேலும் தமிழக கவர்னர் எந்த சட்ட பிரிவின்படி மசோதாக் களை நிறுத்தி வைத்துள் ளார்? அதற்கு ஏதேனும் விதிமுறை உள்ளதா? என்று கேள்வி எழுப்பி இருந்தனர்.

இன்று தீர்ப்பு

பல்வேறு கட்ட விசா ரணைகளுக்கு பிறகு இந்த வழக்கின் தீர்ப்பு தேதி குறிப் பிடாமல் ஒத்திவைக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் இன்று (செவ்வாய்க்கிழமை) சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, ஆர். மகாதேவன் அமர்வு இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கியது.

இந்த தீர்ப்பு பல்வேறு அதிரடியான உத்தரவுகளை கொண்டதாக இருந்தது. தமிழக அரசு கோரிக்கைக்கு முழுமையான வெற்றி தரும் வகையில் சுப்ரீம் கோர்ட் டின் தீர்ப்பு அமைந்துள்ளது. அந்த தீர்ப்பு விவரம் வருமாறு:—

தமிழக சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களை கிடப்பில் போடுவதற்கு கவர்னருக்கு என்ன அதிகாரம் இருக்கி றது? கவர்னர் ஒரு தடவை திருப்பி அனுப்பிய மசோ தாக்களை தமிழக சட்டசபை யில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பிய பிறகு அதன் மீது கவர்னர் 3 விதமான முடி வுகளைதான் எடுக்க முடியும்.

ஒன்று மசோதாவை ஏற்க லாம். இரண்டு மசோ தாக்களை நிராகரிக்கலாம். மூன்றாவது மசோதாவை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கலாம். மசோதாக்களில் ஏதேனும் மாற்றங்கள் இருந தால் மட்டுமே ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க முடியும்.

தவறானது

ஆனால் தமிழக கவர்னர் 2 மசோதாக்களை மட்டும் ஜனாதிபதிக்கு அனுப்பி இருக்கிறார். சட்டசபையில் மீண்டும் நிறைவேற்றிய பிறகு அந்த மசோதாக்களை ஜனாதிபதிக்கு அனுப்பியது தவறானதாகும். 10 மசோ தாக்களை கிடப்பில் போட்டது சட்ட விரோதமா னது. ஒருதலைபட்சமானது.

இது ஒரு பக்கமாக தள்ளப்பட வேண்டும். 10 மசோதாக்களை கிடப்பில் போட்டு வைத்து இருப்ப தற்கு கவர்னருக்கு வீட்டோ போன்ற அதிகாரம் ஏதே னும் இருக்கிறதா? கவர்ன ருக்கு என்று எந்த அதிகார மும் கிடையாது.

நேர்மை இல்லை

10 மசோதாக்களை நிலு வையில் வைத்துள்ள விவ காரத்தில் தமிழக கவர்னரின் செயல்பாடுகள் நேர்மை யானதாக இல்லை என்று கருதுகிறோம். எந்த ஒரு மசோதாவையும் குறிப்பிட்ட காலத்துக்கு பிறகு நிலுவை யில் வைத்திருக்க இயலாது.

கவர்னர் அந்த மசோ தாக்களை உடனடியாக ஏற்றுக் கொண்டு இருக்க வேண்டும். அதாவது மசோதா சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு மாதத்துக்குள் கவர்னர் தனது முடிவை தெரிவித்து இருக்க வேண்டும். நிலுவை யில் வைத்து இருந்ததை எப்படி ஏற்க இயலும்.

ஆலோசனைபடி செயல்படுங்கள்

தமிழக கவர்னர் மாநில அரசின் உதவி பெற்றே செயல்பட வேண்டும். மாநில அரசின் ஆலோசனை படி செயல்படுவதுதான் சரியானதாகும். சட்ட ரீதிபடி கவர்னர் தன்னிச்சை யாக செயல்பட முடியாது.

தமிழக அரசின் செயல் பாடுகளுக்கு கவர்னர் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். எந்தவிதத்திலும் முட்டுக்கட்டையாக இருக்க கூடாது. கவர்னர் அரசியல் சட்டம் 200—வது பிரிவின் படி செயல்படுவது நல்லது.

இவ்வாறு சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் தீர்ப் பில் தெரிவித்து உள்ளனர்.

சுப்ரீம்கோர்ட்டில் இந்த அதிரடி தீர்ப்பு மூலம் கவர்னர் ஆர்.என்.ரவி தன் வசம் உள்ள மசோதாக்கள் மீது முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது தமிழக கவர்னருக்கு ஏற் பட்டுள்ள மிகப்பெரிய பின்னடைவாக கருதப்படு கிறது.

3 நாட்கள் தொடர் விடுமுறை:

பஸ், ரெயில்களில் இடமில்லை

சென்னை, ஏப்.8—

பள்ளி மாணவர்களுக்கு ஆண்டு இறுதி தேர்வும் 1—ம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வும் தற்போது நடைபெற்று வருகிறது. ஏப்ரல் 24—ந்தேதி பள்ளி யின் கடைசி வேலை நாளா கும். அதன் பின்னர் கோடை விடுமுறை விடப்படுகிறது. கோடை விடுமுறை விடப்ப டுவதால் வெளியூர் பயணம் அதிகரிக்கிறது. சொந்த ஊர்களுக்கு செல்ல ஆயிரக் கணக்கானவர்கள் அரசு பஸ்களில் முன்பதிவு செய்து வருகிறார்கள். ரெயில்களில் அனைத்து இடங்களும் நிரம்பியதால் சிறப்பு ரெயில்கள் அறிவிக் கப்பட்டு வருகிறது. தமிழ கத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பிற மாநிலங்களுக்கு அறிவிக்க ப்பட்டுள்ள சிறப்பு ரெயில்கள் நிரம்பி வருகின்றன. சென்னையில் இருந்து தென் மாவட்ட பகுதிகள் மற்றும் கோவை, திருவனந்த புரம, மார்க்கமாக செல்லும் எல்லா ரெயில்களும் நிரம்பி விட்டன. இந்த வாரம் முதல் மே, ஜூன் மாதம் வரை பெரும்பாலான ரெயில்க ளில் எல்லா இருக்கைகளும் நிரம்பிவிட்டன.

நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, திருச்செந்தூர், திருச்சி, ராமேஸ்வரம், பெங்களூர், மைசூரு உள் ளிட்ட பல்வேறு நகரங்க ளுக்கு செல்லக்கூடிய ரெயில்கள் வந்தே பாரத் ரெயில்கள் அனைத்தும் நிரம்பிவிட்டன.

இந்த நிலையில் வருகிற 14—ந்தேதி (திங்கட்கிழமை) தமிழ் புத்தாண்டு தினம் அரசு விடுமுறையாகும். 12, 13—ந் தேதி (சனி, ஞாயிறு) விடுமுறையை தொடர்ந்து தமிழ் புத்தாண்டு தினம் வருவதால் தொடர்ந்து 3 நாட்கள் விடுமுறை கிடைக் கிறது. இதனால் வெளியூர் பயணம் அதிகரிக்கும் என்ப தால அரசு போக்குவரத்துக் கழகங்கள் கூடுதலாக சிறப்பு பஸ்களை இயக்கு கிறது. அரசு விரைவு போக் குவரத்துக் கழகம் 1000 பஸ்களை முழு அளவில் இயக்க திட்டமிட்டுள்ளன.

இதே போல வருகிற 18—ந்தேதி புனிதவெள்ளி அரசு விடுமுறையாகும். அதனோடு சேர்ந்து 19 , 20 ஆகிய நாட்களும் தொடர் விடுமுறையாக இருப்பதால் முன்பதிவு அதிகரித்துள்ளது. சென்னையில் இருந்து புறப்படும் அனைத்து ரெயில்களும் நிரம்பி விட்டன. காத்திருப்போர் பட்டியல் அதிகரித்துள்ள தால் கூட்ட நெரிசலை குறைக்க கோடைகால சிறப்பு ரெயில் இன்னும் கூடுதலாக இயக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

மாண்புமிகு மோட்டார் விபத்துக்கள் தீர்ப்பாயம், மற்றும் சிறப்பு சார்பு நீதிமன்றம், கோவை.

MCOP No. 1437 of 2024

முத்துக்கருப்பன் ...மனுதாரர்/ மனுதாரர்

—எதிர்—

1.தர்ஷீஷ் த/பெ. தமிழ்ச் செல்வன் இந்து முழு வயது கதவு எண். 195, அண்ணாநகர், அம்மன் குளம் தெற்கு, புலியகுளம், ராமநாதபுரம், கோவை- 641 045. (ஓட்டுநர்)

2.தமிழ்ச் செல்வன் த/பெ. ஜார்ஜ் இந்து முழு வயது, கதவு எண்.195, அண்ணா நகர், அம்மன்குளம், தெற்கு புலியகுளம், ராமநாதபுரம், கோயம்புத்தூர்–641 045. (உரிமையாளர்)

...1 மற்றும்2ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் / மனுதாரர், எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தர்ஷீஷ், தமிழ்ச்செல்வன் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள மேற்படி MCOP வழக்கு மாண்புமிகு மோட்டார் விபத்துக்கள் தீர்ப்பாயம் மற்றும் சிறப்பு சார்பு நீதிமன்றம், கோவையில் 11.06.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.30 மணிக்கு 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறினால் மேற்படி MCOP வழக்குஒரு தலை பட்சமாக தீர்ப்பு வழங்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

K.ராம்குமார், MBA., L.L.B.,
வழக்கறிஞர்,கோவை.

SPECIAL SUB JUDGE

மாண்புமிகு மோட்டார் வாகன விபத்து கோரிக்கைகள் சிறப்பு சார்பு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

M.C.O.P.No. 978 of 2024

V.பழனிவேல் த/பெ. வேலாயுதம் ...மனுதாரர்

—எதிர்—

G.ராகுல்,(ஓட்டுநர் /உரிமையாளர்) த/பெ. குணபாலன், 403 ஜி, நாராயணசாமி லேயவுட், 2வது குறுக்குத் தெரு, பீளமேடு, கோயம்புத்தூர்– 641 004.

...1வது எதிர்மனுதாரர்

எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ்

மேற்படி மனுதாரர் மேற்படி நீதிமன்றத்தில் M.C.O.P.No. 978 of 2024 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு வருகின்ற 04.06.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தேதியன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு தாங்களோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி உங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மனு தங்களுக்கு எதிராக தீர்மானிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் அறியவும்.

/நீதிமன்ற உத்தரவுப்படி/
வாதி வழக்கறிஞர்கள்
R.S.மாதவன் B.A.,B.L.,
G.உமா மகேஸ்வரி B.com.,L.L.B.,
N.விஸ்வநாதன் B.A.,L.L.B.,
வழக்கறிஞர்கள்–கோவை

1ADJ

மாண்புமிகு கோயம்புத்தூர் 1வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்.

A.S.No. 56 of 2025

1.M.தேவராஜ், (இறப்பு),2.D.வசந்தா, 3.D.ரகு, 4. D.முரளி, 5.D.விஷ்ணு,
...மேல்முறையீட்டாளர்கள்

—எதிர்—

S.பிரகாஷ்,த/பெ.சுப்பிரமணியம், அலுவலக முகவரி, எண்.195, 2வது தளம், ஹரிபவன் ஹோட்டல், காந்திபுரம் 4வது வீதி, கோயம்புத்தூர்.
வசிப்பிடம் : கதவு எண். 121, சத்யா நகர், லாலிரோடு, கோயம்புத்தூர் – 641 012.
...எதிர்மனுதாரர்

எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ்

மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி மேல்முறையீட்டாளர்கள் A.S.No. 56/2025 என்ற மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி மேல்முறையீடு வருகின்ற 25.4.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தேதியன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு தாங்களோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி உங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மேல்முறையீடு தங்களுக்கு எதிராக தீர்மானிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் அறியவும்.

/நீதிமன்ற உத்தரவுப்படி/
வாதி வழக்கறிஞர்கள்
R.S.மாதவன் B.A.,B.L.,
G.உமா மகேஸ்வரி B.com.,L.L.B.,
N.விஸ்வநாதன் B.A.,L.L.B.,
வழக்கறிஞர்கள்–கோவை

படிவம் - A

பொது அறிவிப்பு

(நொடித்தல் மற்றும் இந்திய திவால்நிலை வாரியத்தின் (தாமாக கலைக்கும் நடைமுறைகள்) ஒழுங்குமுறைகள் 2017ன் ஒழுங்குமுறை 14-ன் கீழ்)

பெட்மேக் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் பங்குதாரர்கள் கவனத்திற்கு

1	கார்ப்பரேட் நபர் பெயர்	பெட்மேக் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
2	கார்ப்பரேட் நபர் துவக்க தேதி	01/04/2008
3	எந்த அதிகாரத்தின் கீழ் கார்ப்பரேட் நபர் துவக்கம்/பதிவு	நிறுவனங்கள் சட்டம் 1956ன் கீழ்
4	கார்ப்பரேட் நபரின் கார்ப்பரேட் அடையாள எண்/ வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்	U18101TZ2008PTC014349
5	கார்ப்பரேட் நபரின் பதிவு அலுவலகம் மற்றும் முதன்மை அலுவலக முகவரி (ஏதேனும் இருந்தால்)	10/291, குன்னங்கல்பாளையம், கணபதிபாளையம் மெயின் ரோடு அம்மன் நகர், திருப்பூர், தமிழ்நாடு, இந்தியா, 641605
6	கார்ப்பரேட் நபரின் கலைப்பு துவங்கப்பட்ட தேதி	05/04/2025
7	கலைப்பு அலுவலரின் பெயர், முகவரி, இமெயில் முகவரி, தொலைபேசி எண் மற்றும் பதிவு எண்.	வெங்கடேஷ் நடராஜன் 119, கூட்டுறவு காலனி, உப்பிலிப்பாளையம் அஞ்சல், கோயம்புத்தூர் 641015 Email: venkatesh@vsandassociates.in Mobile No.: 9843010292 IBBI Reg. No.: IBBI/IPA-001/ IP-P-02315/2021-2022/13572
8	கோரிக்கைகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	07.05.2025

பெட்மேக் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 05/04/2025 அன்று தன்னார்வ கலைப்பைத் தொடங்கியுள்ளதாக இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

மேற்கண்ட வரிசை எண் 7ல் குறிப்பிடப்பட்டுள்ள கலைப்பு அலுவலர் முகவரிக்கு **பெட்மேக் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்டின்** பங்குதாரர்கள், தங்களின் உரிமை கோரல்களை ஆதாரத்துடன் 07/05/2025 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் ஆதாரத்துடன் மின்னணு மூலம் மட்டுமே தங்களின் உரிமை கோரல்களை சமர்ப்பிக்க வேண்டும். மற்ற அனைத்து கடன் வழங்கியவர்கள் ஆதாரங்களுடன் கூடிய தங்களது உரிமை கோரல் களை நேரடியாகவோ தபால் மூலமோ அல்லது மின்னணு மூலமாகவோ சமர்ப்பிக் கலாம்.

உரிமைகோரலில் தவறான ஆதாரங்களை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

நாள்: 08/04/2025
இடம்: திருப்பூர்

வெங்கடேஷ் நடராஜன்
கலைப்பு அலுவலர்

BBI Reg. No.: IBBI/IPA-001/IP-P-02315/2021-2022/13572